<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

**அசல் வழக்கு எண். 57/2022**

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய கிட்டப்பா **PW1.** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 06.03.2025

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | கிட்டப்பா | | |
| Father /Husband Name | : | கோவிந்தசாமி | Court | : |
| Village | : | இலுப்பூர் | Taluk | : |
| Calling | : | | Religion | : |
| Age | : | 78/2025 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

27.04.2022 தேதியிட்ட 3ம் பிரதிவாதியால் வாதிக்கு அனுப்பப்பட்ட ஏல அறிவிப்பின் அசல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இலுப்பூர் அருள்மிகு மத்யாஜ்னேஸ்வரர் ஆலயத்திற்கு வாதி செலுத்திய குத்தகைக்கான அசல் ரசீதுகள்(எண்ணிக்கை – 33) **வா.சா.ஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேலும் ஆவணங்களை குறியீடு செய்ய வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.